8 P தினமலர் திருச்சி 8-5-2008

# நாட்டு வைத்தியர்களுக்கு ஆயுர்வேத மருத்துவ பயிற்சி முகாம்

விராலிமலை,மே.8-

விராலிமலை ஒன்றியம் ராஜாளிப்பட்டியில் மத்திய சுகாதார அமைச்சகமும், மேக்ட் தாய் தொண்டு நிறுவனமும் இணைந்து நாட்டு வைத்தியர்களுக்கு ஆயுர்வேத மருத்துவ பயிற்சி முகாம் நடத்தியது.

மேக்ட் நிறுவன இயக்குநர் சிரில் அலெக்சாண்டர் தலைமை வகித்தார். வெஸ்வா நிறுவன இயக்குநர் ராஜேஸ்கண்ணா முன்னிலை வகித்தார். ஒருங்கிணைப்பாளர் கிளமெண்ட் வரவேற்றார். திண்டுக்கல் காந்தி கிராம ஆசிரமம் லட்சுமி சேவா சங்க ஆயுர்வேத டாக்டர்கள் மாரியப்பன், சுந்தரமீனாள் ஆகியோர் நாட்டு வைத்தியர்களுக்கு இரண்டு நாட்கள் ஆயுர்வேத மருத்துவம் பற்றி பயிற்சியளித்தனர். 52 நாட்டு வைத்தியர்கள் ஹோமியோபதி மற்றும் சித்த வைத்தியர்கள் பயிற்சி பெற்றனர்.